விலை ரூபா 5/-

# ஐக்கிய தீபம்

Aikiyatheepam

தீபம் - 51 | ஆவணி 1999 | பக்கங்கள் 12 | ஒளி 38

## கடந்தகால யுத்த அனர்த்தங்களினால்—

# யாழ். மாவட்ட கூட்டுறவு நிறுவனங்களுக்கு

# சுமார் 55 கோடி ரூபாவுக்கு மேல் சேதம்!

### யாழ். கூ. அ. உ. ஆணையாளர் திரு. செ. கு. சண்முகநாதன்

# எம்மால் முடிந்த உதவிகளை நாம் செய்வோம்

## இலங்கை தேசிய கூட்டுறவு சபைத்தலைவர் திரு. லயனல் சமரசிங்க

"இலங்கையில் தமிழ்மக்களும், சிங்கள மக்களும் அன்றுதொடக்கம் இன்று வரை சகோதரர்களாகவே வாழ்ந்துவருகின்றார்கள். நீண்டகால இடைவெளிக்குப் பின் இன்று நாம் யாழ்ப்பாணம் வந்திருந்தமையால் உங்கள் கஷ்டங்களையும், தேவைகளையும் எம்மால் அறிந்துகொள்ள முடிந்தது. எனவே உங்கள் தேவைகளில் ஒரு சிலவற்றை எமது கவனத்துக்கு எடுத்து அவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம்."

இலங்கை தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு. லயனல் சமரசிங்க மனையியல் டிப்ளோமா பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்த மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழுத் தலைவி திருமதி ரதிசோதிலிங்கம் தலைமையில் யாழ். போதனாவைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள யாழ்ப்பாணக்கல்லூரி மண்டபத்தில் இவ் வைபவம் நடைபெற்றது.

இலங்கைதேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. லயனல் சமரசிங்க கூட்டுறவுக் கொடியினை ஏற்றிவைத்தார்.

திரு: லயனல்சமரசிங்க தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

யாழ். கூட்டுறவுநிறுவனங்களுக்கு தேசியகூட்டுறவுச் சபையின் உதவிகள் தேவை என யாழ். அரச அதிபரும்

(11ம் பக்கம் பார்க்க)

## பிராந்தியக் கூட்டுறவுக்கல்லூரியை இயக்க தேசிய கூ. சபை தீர்மானம்

யாழ். பிராந்திய கூட்டுறவுக்கல்லூரியைப் புனரமைப்புச் செய்து அக்கல்லூரிக்கு வேண்டிய விரிவுரையாளர்களை நியமனம் செய்து கல்லூரியை இயங்கவைப்பதென யாழ்ப்பாணம் வந்துள்ள தேசிய கூட்டுறவுச் சபை தலைவர் திரு. லயனல் சமரசிங்க மற்றும் பணிப்பாளர்கள் கூடித் தீர்மானித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு சபை பணிப்பாளர் சபைக்கூட்ட

(2ம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

☆ ஒருங்கிணைந்த விவசாயம்
☆ கணணித்தொழில் நுட்பம் அன்றுமுதல் இன்று வரை
☆ நிதிச்சந்தையில்தரகுச்சேவைகள்
☆ உணவு நஞ்சாதல்
☆ தாய்ப்பால் மகத்துவம்
☆ தெரிந்து கொள்ளுங்கள்
☆ ஓநாயும் சிறுவனும்

★ கூட்டுறவே நாட்டுயர்வு ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனைதென்னைவளஅபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் பயன்தரும் உற்பத்திகளில் ஈடுபடவேண்டும்

''பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மதுவகை சார்ந்த உற்பத்திகளில் மட்டும் நில்லாது, சூழ்நிலைக்கேற்றவாறு பனை தென்னை சார்ந்த முழுவளங்களையும் ஒன்று சேர்த்து மக்கள் பயன்பாட்டிற்கேற்றவாறு உற்பத்திகளை மேற்கொண்டு புதிய முயற்சிகளில் ஈடுபட முன்வர வேண்டும்''

பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர்கள், தலைவர்கள் மத்தியில் உரையாற்றிய யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. கு. சண்முகநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தொடர்ந்து பேசுகையில், கூறியதாவது:

பனை வெல்லத்தைத் தரமாக உற்பத்தி செய்வதன் மூலம் அவற்றுக்கான சந்தைவாய்ப்பினை பிறமாவட்டங்களில் ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும், யாழ் மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களும் அங்கத்துவ சங்கங்களாக இணைவதற்கு வழிவகை செய்யப்பட்டிருப்பதாகவும், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், ''கூட்டுறவு ஊழியர் வன்முறைப்பாதிப்பு நிதியத்தில் ப. தெ. வ. அ. கூ. சங்க ஊழியர்களையும் சேர்த்துக்கொள்ள நெறியாளர்குழு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

# "கூட்டுறவுக்கல்வி வளர்ச்சி" நூல்வெளியீட்டு விழா

''கூட்டுறவுக்கல்வி வளர்ச்சி'' என்னும் நூல்வெளியீட்டுவிழா யாழ். இந்துமகளிர்கல்லூரி பிரதான மண்டபத்தில் கோப்பாய் ஆசிரிய கலாசாலைவிரிவுரையாளர் திரு.பா. தனபாலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

பருத்தித்துறை சாரதாசேவா ஆச்சிரமசுவாமி சித்ருபானந்தா, கலாநிதி சபா ஜெயராசா ஆகியோர் ஆசியுரை வழங்கினார்கள்.

யாழ். பல்கலைக்கழக கல்வியியல் பீடத் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகம் வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

ஓய்வுபெற்ற யாழ் மாவட்ட நீதிபதி திரு. மு. திருநாவுக்கரசு, தேசிய கல்வி நிறுவன சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. கு. சண்முகநாதன் யாழ். இந்துமகளிர் கல்லூரி அதிபர் திருமதி ச. ஜெயராஜா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

சாவகச்சேரி மகளிர்கல்லூரி அதிபர் செல்வி கி. வீரசிங்கம் நூலினை ஆய்வுரை செய்தார்.

இளவாலை மெ ம. வித்தியாசால ஆசிரியர் திரு எஸ். பாலச்சந்திரன் வரவேற்புரையையும் யாழ். கல்வித்திணைக்கள வளவாளர் திரு. எ சி ஜோர்ச் நன்றி உரையையும் நிகழ்த்தினார்.

யாழ் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபர் திரு. பொ. சண்முகசுந்தரமும் உரையாற்றினார்.

நூலின் ஆசிரியர் திரு. தா. அமிர்தலிங்கம் அறிஞர்களினால் பராட்டப்பட்டு அவரது முயற்சிக்கு பலரும் ஆதரவு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர்.

## பிராந்தியக் கூட்டுறவு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மண்டபத்தில் தேசிய கூட்டுறவு சபை பணிப்பாளர் சபையின் கூட்டம் தலைவர் திரு லயனல் சமரசிங்க தலைமையில் நடைபெற்றது.

பணிப்பாளர் சபை உறுப்பினர்களில் ஒருவரான தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு. எஸ் சிவமகாராசாவும் கலந்து கொண்டார்.

இக் கூட்டத்தில், யாழ் மாவட்ட மகளிர்குழுவின் செயற்பாடுகளுக்கு இருபத்தையாயிரம் ரூபாவும், யாழ் கூட்டுறவு சபைக்கு ஒலிபெருக்கி சாதனங்களும் வழங்குவதென்று தீர்மானிக்கப்பட்டதுடன் யாழ் வீரசிங்கம் மண்டப புனரமைப்பு வேலைகளுக்கு தேவையான நிதியை அமைச்சு மட்டத்தில் பெற்று வழங்குவதற்கு உரிய முயற்சிகளை எடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது

# ஐ. நா. அபி. திட்டம் தீவகமக்களுக்கு கடன் உதவி

ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பின் யாழ்ப்பாணம் மீள் குடியமர்வு புனர்வாழ்வுத்திட்டத்தின் கீழ் தீவகப் பகுதி மக்களுக்கு சிறுதொழில் முயற்சிக்கடன் தீவுப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிராமிய வங்கிகள் மூலம் வழங்கப்படவுள்ளது.

இக் கடன் திட்டம் ஒன்றகாவே வலிகாமம் பகுதிக்குதியில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு தெல்லிப்பழை, அச்சுவேலி, சுன்னாகம், பண்டத்தரிப்பு, அளவெட்டி மல்லாகம் ஆகிய ஐந்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கிகளின் மூலம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தகும்.

### வரவேற்கிறோம்

கூட்டுறவாளர்கள், எழுத்தாளர்களிடமிருந்து கதை, கட்டுரை, கவிதை பொது அறிவு விடயங்களை எதிர்பார்க்கின்றோம். எழுதும் தாளில்ஒரு பக்கத்தில் மட்டும் சுருக்கமாக எழுதி,

ஆசிரியர் ஐக்கியதீபம்
யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
இல 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருங்கிணைந்த விவசாயம்

இன்றைய தேவைக்கேற்ப விவசாயிகளின் நன்மைகருதி மாவட்ட விவசாய பயிற்சி நிலைய உதவி விவசாயப் பணிப்பாளர் (கல்வியும் - பயிற்சியும்) திரு ச.சின்னத்துரை எழுதிய ''ஒருங்கிணைந்த விவசாயம்'' எனும் கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த விவசாயம் என்றால் என்ன?

பயிர்ச்செய்கையோடு விலங்கு வேளாண்மையையும்இணைத்து மேற்கொள்ளப்படும் கூட்டான உற்பத்தி முயற்சி ஒருங்கிணைந்த விவசாயம் ஆகும்.

### பயிர்ச் செய்கை

☆ தானியப் பயிர் ☆ கிழங்குப்பயிர் ☆ மரக்கறிப்பயிர் ☆ இலைக்கறிப் பயிர் ☆ பழப்பயிர் ☆ கால்நடை உணவாக உபயோகிக்கும் பயிர்கள்.

### விலங்குவேளாண்மை

☆ மிருகங்கள் ☆ பறவைகள் ☆ தேனீ ☆ மீன்

### நோக்கம்

☆ குறிப்பிட்ட விளைநிலத்தின் உச்சப் பயன் பாட்டைப் பெறுதல்.

☆ குறிப்பிட்ட இடத்திலிருந்து பெறக்கூடிய சகல விவசாய மூல வளங்களையும் உள்ளீடுகளையும் உபயோகிக்கக்கூடிய விவசாய உற்பத்தியைத் தொடர்ச்சியாகப் பெறுதல்.

### ஒருங்கிணைந்த விவசாயத்தின் நன்மைகள்

☆ ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து கூடியஉற்பத்திப்பொருட்களைப் பெறுவதன் மூலம் கூடிய நிகரலாபத்தைப் பெறலாம்.

☆ விவசாயி தமக்கு வேண்டிய உணவுப் பொருட்களை உற்பத்தியாக்கலாம்.

☆ சமச்சீர் போஷாக்கு நிறைந்த சுத்தமான உணவுப் பொருட்களைப் பெறலாம்.

தாவர உணவு;- மரக்கறி, தானியம், பழம்.

மிருக உணவு:- பால், முட்டை, மீன், தேன்.

☆ எதிர்பாராத விதமாக ஒரு முயற்சியில் நட்டம் ஏற்பட்டாலும் மற்றைய முயற்சிகள் அதனை ஈடுசெய்யும்.

☆ வருடம் முழுவதும் தொடர்ச்சியாக உற்பத்திப்பொருட்களும், வருமானமும் கிடைக்கும்.

☆ வருடம் முழுவதும் தொடர்ச்சியாகத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

☆ கழிவுப்பொருட்களை உற்பத்திப் பொருட்களாகப் பாவிக்கலாம்.

பயிர்க்கழிவு;- மிருகஉணவாகப்பாவித்தல்.

மிருகக் கழிவு:- தாவரத்திற்குப் பசளையாகப் பாவித்தல்.

☆ கூட்டெரு உற்பத்தியையும், உபயோகத்தையும், ஊக்குவிக்கலாம்

☆ விளைநிலத்தின் மண்வளத்தை தொடர்ந்து பேணிப் பாதுகாக்கலாம்.

**திரு. ச. சின்னத்துரை**

☆ மிருகங்கள் மூலம் இழுவைச் சக்தியைப் பெறலாம்

☆ உயிர்வாயுவை உற்பத்தி செய்யலாம்:

இழுவைச் சக்தி —
- உழவு
- விவசாய உள்ளீடுகள் விளை பொருட்கள் கொண்டுசெல்வதற்கு

உயிர் வாயு:- சமைப்பதற்கு. மின்குமிழ் ஒளிர்வதற்கு நீர் இறைக்கும் இயந்திரம் இயக்குவதற்கு குளிர்சாதனப் பெட்டி செயற்படுவதற்கு.

கழிவுப்பொருள்:-சேதனப்பசளையாக கூட்டெரு தயாரிப்பதற்கு.

### உற்பத்தியை தீர்மானிக்கும் காரணிகள்

பயிர்கள் + விலங்குகள் —— சூழல் காரணிகள் ↑ —— மூலவளங்கள் ↑ —— உள்ளீடுகள் ↓ —— உற்பத்திப் பொருட்கள்

# மண்வளம்

### சூழற்காரணிகள்

### 1. காலநிலையின் தன்மை

மழை வீழ்ச்சி (நீர்) வெப்பநிலை பகற்கால அளவு காற்று, சார்ஈரப்பதன் போன்றவற்றிற்கு ஏற்ப பயிர்களையும், விலங்குகளையும், தெரிவு செய்தல் வேண்டும்.

### 2. மண்ணின் தன்மை

மண்ணின் பௌதீக, இரசாயன உயிரியல் இயல்புகள் பயிர்ச்செய்கையில் கவனிக்கப்படல் வேண்டும்:

பௌதீக இயல்புகளில் மண்ணின் கட்டமைப்பு, இழையமைப்ப நீர்வடியும் தன்மைகளுக்கேற்ப பயிர்களைத் தெரிவுசெய்தல்வேண்டும். இருவாட்டி மண் பயிர்ச்செய்கைக்குச் சிறந்தது: களித்தன்மையான மண்ணையும், மணற்பாங்கான மண்ணையும், இயற்கைப்பசளைகளைச் சேர்ப்பதன் மூலம் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற வளமான மண்ணாக மாற்றலாம்.

இரசாயன இயல்புகளில் மண்ணின் பி. எச் பெறுமானத்தன்மைக்கேற்ப பயிர்களைத் தெரிவுசெய்தல் வேண்டும். பி. எச். பெறுமானம் நடுநிலைபாகவுள்ள மண்பயிர்ச்செய்கைக்குச் சிறந்தது. அமிலத் தன்மை களித்தன்மைகொண்ட மண்வகைகளைத் தகுந்தவாறு திருத்துவதன் மூலம் பல்வேறு பயிர்களை உற்பத்தியாக்கலாம். மேலும் மண்ணின் அமிலத்தன்மை, காரத்தன்மை என்பவற்றிற்கேற்ப அதில் பயிரிடக்கூடிய பயிர்களையும், பயிர்வர்க்கங்களையும், தெரிவு செய்யலாம்.

உயிரியல் இயல்புகளில் மண்வளத்தைப் பேணிப்பாதுகாக்கின்ற நுண்ணுயிர்களின் தொழிற்பாடுகளைத் தொடர்ந்து ஊக்குவிக்கும் முறைகளையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். (8ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணணித் தொழில் நுட்பம் அன்று முதல் இன்று வரை


திரு. சி. மகாலிங்கம்
( B. A. Dip in Edu )


இந்த நூற்றாண்டின் தலைசிறந்த தொழில்நுட்பமாகத் திகழ்வது கம்பியூட்டர் தொழில்நுட்பமாகும். விஞ்ஞானம், தொழில்நுட்பம், கல்வி, பொருளாதாரம், அரசியல், கலாச்சாரம், மருத்துவம், வரலாறு, பொழுதுபோக்குத்துறை, தொடர்புத்துறை, சமூக சேவைகள் போன்ற சகல துறைகளையும் ஆக்கிரமித்துள்ளதும் நீடித்து நிலவுகின்றதுமாக இது விளங்குகின்றது. கணணித் தொழில் நுட்பமும், தொலைத்தொடர்புத் தொழில்நுட்பமும் இணைந்து இன்று உலகைக்கைக்கடக்கமான ஒரு தகவல் யுகமாக மாற்றியமைத்து வருகின்றது எனவிஞ்ஞான ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன. கடந்த மூன்று தசாப்தங்களினுள்ளும் கம்பியூட்டர் தொழில் நுட்பம் மிகப் பாரிய வளர்ச்சியைக் கண்டு வருகின்றது.

சாதாரண கணிதஉத்தியிலிருந்து நேரத்தையும், பணத்தையும் மீதப்படுத்துவதற்கும், மிகச் சிக்கலான பல வேலைகளை இலகுவாகச் செய்வதற்கும், தொலைத்தொடர்பு சாதனங்களுடன் இணைந்து தகவல்கள், கருத்துக்கள், கண்டுபிடிப்புக்கள் விளையாட்டுக்கள் என மனித செயற்பாட்டின் அனைத்துஅம்சங்களுடனும் இணைந்த ஒரு தொழில் நுட்பத் துறையாகக் கணணித்துறை விளங்குகின்றது.

''மின்சார மூளை'' என அழைக்கப்படும் கணணி மனிதனால் ஏவப்படும் கருமங்கள் அனைத்தையும் விரைவாகவும், துல்லியமாகவும் பணிகளை நிறைவேற்ற முடியும் என்பதை நிலைநாட்டி வருகின்றது.

நுண் கணணிகள் தொழில்நுட்பமும், தொலைத்தொடர்புத்துறையின் இணைப்பும் 'கணணித்தொழில் நுட்பத்துறையின் மிகப் பிரகாசமான புரட்சிகரமான மாற்றங்களுக்கு வழி வகுத்துச் செல்கின்றன. இவை சமூகத்திற்குள் அடிப்படை மாற்றங்களையும் ஏற்படுத்தி வருகின்றன என ஆய்வுகள் காட்டுகின்றன.

வரலாற்றுக்கு முந்திய காலத்திலேயே மனிதன் தனது விரல்களினால் எண்ணுவதன் மூலமும், சிறு கற்கள், தடிக்குச்சிகள், சிப்பிகள் என்பனவற்றைச் சேகரிப்பதன் மூலமும், தான் வாழ்ந்த குகைச் சுவர்கள் மீது குறியிடுவதன் மூலமும் கணக்கிட்டு வந்தான். கணக்கிட வேண்டிய தேவையும் கணக்கிடலைச் சரிவரச் செய்ய வேண்டி அதில் ஈடுபடும்போது ஏற்பட்ட சலிப்பு, சோர்வு என்பனவுமே அவற்றைப் போக்கக்கூடியதாகக் கணக்குமுறையிலும் கணிப்பீட்டுக் கருவியிலும் புத்திக்கூர்மையைத் தூண்டியது.

அவனது நாகரீகம், மேம்பட கணக்கிடுவதற்கும் முன்னேற்றகரமான புதுமையான உபகரணங்கள் தேவைப்பட்டன. இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சீனாவில் கணக்கிடுவதில் கோலிச்சட்டம் பயன்படுத்தப்பட்டதாகநம்பப்படுகின்றது. இன்றும் கூட சில ஆசிய நாடுகளில் நாளாந்தக்கணக்குமுறையில் கோலிச் சட்டம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஸ்கொட்லாந்துநாட்டவரான கணித அறிஞர் ஜோன் நேப்பியர் என்பவர் கணக்கிடுவதற்கு உதவும் சாதனம் ஒன்றைக் கண்டுபிடித்தார். இதனையே ''நேப்பியரின் கோல்கள்'' என அழைக்கப்படுகின்றது. நேப்பியர் மடக்கைகளையும் கண்டுபிடித்தார். இம் மடக்கைகள் அவர் பெயராலேயே ''நேப்பியரின் மடக்கைகள்'' எனக் குறிப்பிடப்படுகின்றன இவையும் கூட்டல், கழித்தல் செயற்பாடுகளில் பெருக்கல் வகுத்தல் என்பவற்றைக் குறைத்துவிடுகின்றன. மடக்கை முறையை அடிப்படையாகக் கொண்டே பின்னனுர் கணக்கு இயந்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மிகச் சமீபகாலம் வரை பயன்படுத்தப்பட்டு வந்த நகரும் சட்டம் நேப்பியரின் காலத்திலேயே உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதுவே எண்கணித மானிக்கு ஒப்பாக உருவாக்கப்பட்ட முதலாவது சாதனம் ஆகும்.

1623 இல் வில்ஹெல்ம் ஷிக்காட் என்னு வானியல் பேராசிரியர் கூட்டவும், கழிக்கவும் மறைமுகமாக பெருக்கவும் வகுக்கவும் கூடிய இயந்திரம் ஒன்றை வடிவமைத்தார்.

கூட்டல் கழித்தல் கணக்குகளை பொறிமுறையில் செய்யக்கூடியதாக 1642 இல் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிளெய்சி பாஸ்கல் என்ற 19 வயது இளைஞரால் உருவாக்கப்பட்டது. இவற்றில் சில இயந்திரங்கள் இன்றும் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

கணக்கு இயந்திரங்கள் வியாபார ரீதியில் சந்தைப்படுத்தப்பட்டது, 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே ஆகும். இப்பொழுது அலுவலகங்களில் பயன்படுத்தும் கணணிகளின் முன்னோடியான கணணிகள் 1880 ஆம் ஆண்டளவில் உருவாக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டன.

1801 இல் முதன்முதலில் துளையிட்ட அட்டைகள் மூலம் தகவல் பரிமாற்றம் எடுத்துக்காட்டப்பட்டது. இச் செயற்பாட்டுக் கண்டுபிடிப்பு இங்கிலாந்து நாட்டவரான சார்ள்ஸ் பாபேஜ் என்பவரின் சிந்தனையைத் தூண்டிவிட மனிதனின் தலையீடு இல்லாமல் செயற்படும் சிற்றிலக்கக் கம்பியூட்டர் ஒன்றை 1822 இல் வடிவமைத்துக் காட்டினார். இவரது கண்டுபிடிப்பின் பெறுபேறுகளில் பெரும்பாலானவை இன்றுள்ள கணணிகளில் உபயோகிக்கப்படுகின்றன.

''பாபேஜ்'' உடன் இணைந்து ஆராச்சியில் ஈடுபட்ட கணிதமேதை பைரன் பிரபுவின் இளையமகன் லவ்லேஸ் சீமாட்டி பூச்சியங்களையும், ஒன்றுகளையும் மட்டுமே பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் இரட்டை எண்கணிதமுறை ஒன்றைக் கண்டு பிடித்தார். இது இப்பொழுதும், சிற்றிலக்க எண்கணணிகளில் சர்வசாதாரணமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

1890 வரை விரிவானமுறையில் பயன்படுக்தப்பட்ட துளையிட்ட அட்டைகள் ஹோலரிங் அட்டைகள் பாவனைக்கு வந்ததும் ஒதுக்கித்தள்ளப்பட்டுவிட்டன. ஹோலரிங் அட்டைகளைக்கண்டு பிடித்தவர்கள் ஹெர்மன் - ஹோலிரிக் ஆவர்.

1944 இல ஹோவாட்ஜக்கன் என்பவரும், ஹார்வாட் சர்வகலா சாலையும் இணைந்து தன்னியக்கமுள்ள தொடர்புமறை கட்டுப்படுத்தப்பட்ட கணக்கு இயந்திரம் ஒன்றை சர்வதேச வியாபார நிறுவனத்தின் அனுசரணையுடன் தயாரித்தனர். இதற்கு மார்க் 1'' எனப் பெயரிடப்பட்டது. இது 1944ல் ஹாவாட் சர்வகலாசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது இதுவே உலகின் முதலாவது முற்றிலும் தானாக இயங்கும் கணணியாகும்.

(9ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்ற இதழ் தொடர்ச்சி) **நிதிச் சந்தையில் தரகுச்சேவைகள்**

# முகாமையாளர்களின் நேரச் சேமிப்பு

**வி**ற்பனைப் பேரேடுகளை மேற்பார்வை செய்தல், நெறிப்படுத்தல் ஆகியவற்றில் உயர் முகாமையினர் கணிசமான நேரத்தை ஈடுபடுத்துகின்றனர். இதனால் ஏற்படும் செலவுக் கூறினை அலட்சியம் செய்யும் போக்கு அவதானிக்கக் கூடியதாக உள்ளது

பாரிய நிறுவன மொன்றில் சில உயர் முகாமையாளர்களும் நடுத்தர முகாமையாளர்களும் விற்பனைப் பேரேட்டு நிர்வாகப் பணிகளை மேற்பார்வை செய்ய வேண்டியுள்ளது. பிரதம நிறைவேற்று அதிகாரி தனது நேரத்தில் மாதத்திற்கு 4-5 மணித்தியாலங்களை இப் பணியில் ஈடுபடுத்த வேண்டியுள்ளது.

மேற்கூறிய செலவுக் கூறுகள் யாவற்றையும் கணிக்கும் போது மாதாந்தம் ரூபா 3-5 மில்லியன் விற்பனைப் புரள்வு நடைபெறும் நிறுவனங்களில் விற்பனைப் பேரேட்டுடன் தொடர்பான (மேற்குறிப்பிட்ட) பணிகள் தொடர்பாக மாதாந்தம் ரூபா 25000 செலவு ஏற்படும். எனவேதான் விற்பனைப் பேரேட்டுப் பணிகளைத் தரகுக் கம்பனிக்கு ஒப்படைத்தால் ரூபா 25000 சேமிக்கலாம் என்பது வலியுறுத்தப்படுகின்றது. ( State of the art Technology ) கணனித் தொழில்நுட்பம் பேரேட்டுக் கணக்குகளை (விற்பனை) தரகுக் கம்பனியிடம் ஒப்படைப்பதால் முதல்வரின் கணக்குகள் யாவும் மிக நவீன தொழில் நுட்ப ஆற்றல் பெற்ற கணணிகளால் கையாளப்படுவதும் அடுத்த அனுகூலமாகும்.

ஏனெனில், சகல தரகுக் கம்பனிகளும் கணணிச் சேவையைப் பயன்படுத்துகின்றார்கள். அத்துடன் கணணிச் சேவைகளைச் சொந்தமாகப் பராமரிப்பதும் நிறுவனங்களுக்குப் பெரும் செலவினை ஏற்படுத்தும். எனவே முதல்வர் நிறுனத்திற்கு கணணிச் சேவைப் பராமரிப்புச் செலவும் ஏற்படமாட்டாது.

## நீண்டகாலத் திட்டமிடலுக்கு சந்தர்ப்பங்கள், வாய்ப்புக்கள்

விற்பனைப் பேரேட்டுப் பணிகள் தரகுக் கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டால் உயர் முகாமையினர் மேற்பார்வை நெறிப்படுத்தல் பணிகளில் ஈடுபடவேண்டிய அவசியம் இல்லாதொழிகிறது. இப் பணிகளில் உயர் முகாமையினர் ஈடுபட்டால் கடன்களை மீளப்பெறும் நடவடிக்கை தொடர் நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இதனால் நிறுவனத்தின் நீண்ட வளர்ச்சி, நோக்கங்கள், இலக்குகள் தொடர்பான உத்திகள், திட்டங்கள் வகுப்பது தொடர்பாக ஈடுபட முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, தரகு நிறுவனம் விற்பனைப் பேரேட்டுப் பணிகளில் ஈடுபடுவதனால் முதல்வர், கம்பனி உயர் முகாமையாளர்கள், நிறுவனத்தின் நீண்டகால வளர்ச்சி தொடர்பான உத்திகள், திட்டமிடல் ஆகியவற்றில் ஈடுபட முடிகின்றது.

**மா. நடராசசுந்தரம்**
வணிக முகாமைத்துவ பீடாதிபதி
யாழ். பல்கலைக்கழகம்

## தரகுக் கம்பனியால் கிடைக்கும் அனுகூலங்கள்

1 முதல்வர் தரகுக் கம்பனியிடம் கடன்அறவிடும்பணியை ஒப்படைக்கிறார்.

2 அதே தரகுக் கம்பனி வேறுபல நிறுவனங்களுக்கும் இதே சேவையை ஆற்றுகிறது.

3 தரகுக் கம்பனிக்கு குறிப்பிட்ட கடனாளி நிறுவனத்திடம் ஒரு முதல்வரின் கடனைத் திரட்டும் நடவடிக்கையில்மட்டும் ஈடுபடவில்லை

4 இதே கடனாளி நிறுவனத்திடம் பல முதல்வர்களின் சார்பாக கடன் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றது.

5 எனவே, பலமுதல்வர்களின் சார்பில் ஈடுபடுவதால் தரகுக் கம்பனியின்சேவைக்கட்டணங்கள், அலகுக் கட்டணம் வீழ்ச்சியடைவதால் முதல்வரின் செலவு ( தரகுக்கம்பனி ) வீழ்ச்சியடைகிறது.

மேற்படி காரணிகளால் தரகுக் கம்பனியால் கிடைக்கும் பல அனுகூலங்களும் வெளிப்படுகின்றன. இருப்பினும், தரகுக் கம்பனியால் கிடைக்கும் குறுங்கால அனுகூலங்களால் நீண்டகால அனுகூலங்களை அலட்சியம் செய்யும் மனப்பான்மை சில அனுபவம் பெற்ற முகாமையாளர்களிடமும் காணப்படுகின்றது. குறுங்கால அனுகூலங்களைப்போன்று நீண்டகால அனுகூலங்களும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இதன் காரணமாகவே தரகுக்கம்பனிகளின் சேவையால் கிடைக்கும் பயன்களை, கிடைக்கும் பணரீதியான அனுகூலங்களை மட்டும் கணக்கெடுத்து வேறு நிதிநிறுவனங்களுடனோ, நிதிச் சாதனங்களுடனோ ஒப்பிடுவது தரகுக்கம்பனியால் கிடைக்கும் பலவித அனுகூலங்களை அவதானிக்க முடியாதநிலை ஏற்படுகின்றது.

## வேறு குறுங்கால நிதிநிறுவனங்களுடன் ஒப்பிடுதல்

**வணிக வங்கிகள்**

நிலையான சொத்துக்களின் அடிப்படையில்; வேறு வகையான பிணைப் பொறுப்புக்களின் அடிப்படையில்; நிறுவனத்தின் கடந்தகால நாணயத்தின் அடிப்படையில்; கடன்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

வணிக வங்கிகள் நிறுவனங்களின் எதிர்காலச் செயலாற்றலைக் கணித்துக் கடன்களை வழங்குவதில்லை. அத்துடன், கடன் பெறுகைகளுக்கு எதிராகக் கடன்களைப் பொதுவாக வழங்குவதில்லை. அப்படிக் கடன் வழங்கினாலும் 40% த்திற்கு மேற்படுவதில்லை. (கடன்களின் பெறுமதியில்) தரகுக்கம்பனி 80% வரைக்கும் கொடுப்பனவு செய்கின்றது பேரேட்டு (விற்பனைக்) கணக்குகளை பராமரிக்கின்றது.

தரகுக்கம்பனி சேவையை விற்பனைச் சிட்டைக்கழிவு (Billsinvoice Discounting) டன் ஒப்பிட்டு இரண்டையும் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியாத இடர்ப்பாடும் காணப்படுகின்றது.

## விற்பனைச்சிட்டைக் கழிவின் அனுகூலம்

கடன் சொள்வனவின் போது கடனை விரைவாக அடைப்பதற்கான வழிவகையேசிட்டைக் கழிவு.

கடனில் பணம் முடங்காமல் விரைவாகத் தீர்க்கப்படும் அனுகூலம் கிடைக்கின்றது ஆனால் பின்வரும் நடவடிக்கைகளை

8ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு நஞ்சாதல்

கடந்த சில காலங்களில் ஜப்பான் நாட்டில் பாடசாலை மாணவர்கள் எண்ணாயிரத்துக்கும் அதிகமானோர்கள் உணவு நஞ்சாதலுக்கு உள்ளானார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனவே ஜப்பான் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் போல் எமது ஊர்களிலும் இத்தகைய விபரீத விளைவுகள் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கமாகக் கொண்டு ''சுகமஞ்சரியில்'' வைத்தியகலாநிதி செ.சு. நச்சினார்க்கினியன் எழுதிய இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

நாம் உண்ணும் உணவு பல வழிகளில் எமது உடலின் இயல்பு நிலையை மாற்றி பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இந்நிலை தீவிரமாக இருக்கும் பொழுது உணவு நஞ்சாதல் ( Food Poisoning ) ஏற்பட்டிருக்கின்றது என்று கூறுவார்கள்.

சில சமயங்களில் சாதாரணமாக நல்லநிலையில் இருக்கும் உணவுடன் வேண்டுமென்றோ, ஒரு நபரைக் கொலை செய்யும் நோக்கத்திற்காகவோ அல்லது தற்கொலை நோக்கத்திற்காகவோ, அல்லது எதிர்பாராத விதமாகவோ நச்சுப்பதார்த்தங்களைக் கலப்பதால் உணவு நஞ்சாக்கப்படுகின்றது. உதாரணம் : என்ட்றின் மலத்தியோன், பொலிடோல், முதலியன வெற்றிலை, கோவா, கத்தரி, திராட்சை என்பனவற்றிற்கு மருந்து விசிறப்பட்டு இரண்டு கிழமைகள் முடிவடைவதற்குள் அவற்றை உணவுப் பாவனைக்கு பயன்படுத்துதல்.

## சுகவளம்

நோயூட்டும், நுண்கிருமிகள், நுண்அங்கிகள் ஆகியவற்றால் உணவு நஞ்சாதல் பற்றி ஆராய வேண்டும். உணவில் கலந்துவிடும் இவ்வாறான நுண்அங்கிகள் நமது கவனக் குறைவாலேயே உடலுட் செல்லுகின்றன நோயூட்டும் நுண்அங்கிகள் சுற்றாடலில் அசுத்தம் நிறைந்திருக்கும் பொழுது காணப்படுகின்றன. உணவுப் பண்டங்களில் தூசு, ஈ முதலியன படியும் பொழுது, கீழே நிலத்தில் இருக்கும் பொழுது காற்று, கரண்டி உணவு வைக்கும் பாத்திரம் அசுத்தமான நீர் முதலியவை மூலமாகவும், நுண்கிருமிகள் உணவைச் சென்றடைகின்றன. உணவு நன்றாக சூடாகும் பொழுது இந்நுண்அங்கிகள் இறந்து விடுகின்றன. எனவே சமைத்த உணவு இந்நிலையில் ஆபத்தின்றி இருக்கின்றது.

சமைத்த உணவு சூடு ஆறியவுடன் காற்று, தூசி, இலையான் முதலியவற்றில் இருந்து நன்றாக மூடிப் பாதுகாக்கப்படாவிட்டால் நுண் அங்கிகள் இவ்வுணவை அடைந்து பல்கிப் பெருகும் அதுவும் மாமிசம், மீன், முட்டை முதலியவற்றில் மிகவும் விரைவாகப் பெருக்கமடையும் இவ்வுணவை நாம் பழுதுபட்டதாகக் கணிக்க வேண்டும்.

இவ்வுணவு மறுபடியும் சூடாக்கப்படும்பொழுது இந்நோய்க்கிருமிகள் மடிந்துவிடுகின்றன. ஆனால் சூடாக்கப்படாவிட்டாலோ, அல்லது நல்ல முறையில் சூடு பரவாது போனாலோ கிருமிகள் உணவுடன் வாய் மூலமாக குடலுக்குச் சென்று பலபாதிப்புக்களை ஏற்படுத்தும் இப்பாதிப்புகள் வயிற்றுநோ, வாந்தி, வயிற்றோட்டத்தில் இருந்து மரணம் வரை இருக்க முடியும். இதுவே அதிகமாக பேசப்படும் உணவுநஞ்சாதலாகும். இப்படியான உணவுப் பாத்திரத்தை கரண்டியை முறையாக கழுவாமல் இன்னொரு முறை வேறு உணவு வைக்கப் பயன்படுத்தினாலும் அந்த உணவும் 'நஞ்சாக்கப்பட்டும்' கிருமிகள் அந்த உணவிலும் பெருக்கமடைய ஆரம்பிக்கும்.

ஜப்பானைகலக்கும் நஞ்சாதலில் ''ஈ - கோலை'' (E Coli) எனப்படும் பக்ரீறியா கிருமி காரணியாக இருப்பது பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த பக்ரீறியாமனித, மிருக மலத்தில் காணப்படுவது. சுற்றாடலில் மலிந்திருப்பது ஜப்பானின் கலாச்சார பழக்க வழக்கங்களில், இறால், நண்டு முதலிய மாமிச உணவு வகைகளை சிறிதளவு மட்டுமே சூடாக்கியோ அல்லது சூடாக்காமலோ வேறு உணவுக்கலவைகளுடன் உண்ணும் பழக்கம் இருக்கின்றது. ஆகவே மேற்கூறிய உணவு கையாளும் முறைகளில் சரியான சுகாதாரமுறை பேணப்படாமல் போனால் அதன் தாக்கம் பெரிதாக இருக்கும்.

ஈ கோலை நுண்ணங்கியைப் போல், வேறுபல நுண்ணங்கிகளும் நமது சுற்றாடலில் காணப்படுகின்றன நமது பிரதேசங்களில் ''உணவு நஞ்சாதல்'' முக்கியமாக கலியாண வீடு, அந்தியேட்டி வீடு, ஒன்று கூடல் நிகழ்ச்சிகள் என்பவற்றுக்கு விசேடமாக பெருமளவு உணவுதயாரிக்கும் பொழுது 'உணவு நஞ்சாதல்'' ஏற்படுவது அறியப்பட்டுள்ளது இதற்கு முக்கிய காரணம் இந்நாட்களில் விசேடமாக வீட்டுக்குவெளியே உணவு தயாரிக்கப்படுவதும் அந்த இடம் பல சந்தர்ப்பங்களில் உணவு தயாரிக்க பொருத்தமற்று இருப்பதும் (அருகே அடுத்த வீட்டுக் கோழிக்கூடு மலத்துடன், மலசலகூடம், குப்பைக் கிடங்கு இலையான் முதலியவை வேலியால் மறைக்கப்பட்டு இருக்கும்) உணவு தயாரிப்பவர்கள் போதிய சுகாதார அறிவு இல்லாதவர்களாகவும், பரிமாறுபவர்கள் வெளியேயும், உள்ளேயும் சென்று வந்து கால்களில் நுண்ணங்கிகளைச் சுமந்து வந்து பந்தியில் இருந்து உணவு உண்பவர்கள், வாழைஇலைக்கு அருகாக, மேலாக நடப்பதும், கொதிக்காத நீரைப்பரிமாறுவதும், காய்கறிகள் சரியாகக் கழுவாது பாவிப்பதாலும் என்று இவ்வாறு அடுக்கிக்கொண்டே செல்லலாம் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் உணவு தயாரிப்பது, பரிமாறுதல் முதலியவற்றில் கூடிய கவனம் செலுத்தும் பழக்கத்தை நாம் மேற்கொள்ள வேண்டும். விருந்துக்கு அழைத்து (உணவு நஞ்சாதல்) விஷம் கொடுத்தவர்களாவோம்.

ஆகவே நா உணவுப்பதார்த்தங்களை நன்றாக சுத்தமாகக் கழுவி தேவையான அளவு சூடாக்கி, மூடி வைத்திருந்து, உடனுக்குடன் பாவிப்பது நமக்கு நல்லது நாம் நமது உணவைத் தயாரிக்கும் பொழுது பாவிக்கும் 'சரக்குப்' பொருள்களும் கிருமிகளை அழிக்கப் பயன்பட்டிருக்கலாம்.

### அயடின் கலந்த உப்பு

அயடின் கலந்த உப்பைத் தினமும் உபயோகிப்பதன் மூலம் தொண்டைக் கழலை, நைறொக்சின் குறைவினால் பிள்ளைகளுக்கு ஏற்படும் நோய் போன்றவற்றை மட்டுமல்லாமல்லாது மிகமுக்கியமாக பரவலாகக் காணப்படும் மந்த புத்தி நிலையும், மனக்கோளாறுகளையும் தவிர்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ப்பால் மகத்துவம்

ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி முதல் 7ம் திகதி வரை 'அகில உலக தாய்ப்பால் தினம்'' கொண்டாடப் படுவதை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது

வருடா வருடம் ஒரு லட்சம் குழந்தைகளை சாவிலிருந்து காப்பாற்றக் கூடிய மலிவான நம்பிக்கையான, பாதுகாப்பான, வாயால் கொடுக்கக் கூடிய குளிரூட்டப்பட்டு வைத்திருக்க அவசியமற்ற ஒரு தடுப்பு மருந்து உண்டென்றால் அது தான் தாய்ப்பால் ஆகும்.

தாய்ப்பால் ஊட்டுதலால்,

☆ அடுத்தபிள்ளை பிறப்பைத் தள்ளிப் போடுகிறது.

☆ தாய்க்கு சினைப்பை கட்டிகளும், மார்பக புற்று நோய் உண்டாவதையும் தடுக்கிறது.

☆ சிசுக்களுக்கு குடலில், சுவாசத் தொகுதியில், காதில் சிறு நீர்த் தொகுதியில் தொற்று ஏற்படுவதைத் தடுக்கின்றது

செயற்கைப் பால் (மாப்பால்) கொடுக்கப்படும் பிள்ளை, தாய்ப் பால் கொடுக்கும் பிள்ளையை விட வயிற்றோட்டத்தினால் இறப்பதற்கான சந்தர்ப்பம் 14 மடங்கு அதிகம் என்று கணிப்பிடப்பட்டுள்ளது

முற் காலத்தில் தாய்மார்கள் குழந்தையை பள்ளியில் சேர்க்கும் வரையில் தாய்ப் பாலைக் கொடுத்து வளர்த்து வந்தார்கள். அந்தக் குழந்தைகளும் முழுமையான பலத்தோடு நீண்ட ஆயுளைப் பெற்று வாழ்ந்தார்கள்

தற்பொழுது தாய்மார்கள் ஒரு மாதத்திலும், ஆறுமாதத்திலும் தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்தி விடுகிறார்கள் இவ்வித தாய்மார்களை நம்பியே சில மருந்துக் கம்பனிகள் மாவுப் பொருளைத் தயாரித்துள்ளார்கள். இவ்வித மாவுப் பொருளைக் கொடுத்தே குழந்தையை வளர்த்து வருகிறார்கள்.

ஒரு தாய் தனது குழந்தைக்கு சுமார் இரண்டு ஆண்டுகள் தாய்ப் பால் கொடுக்கலாம். ஆனால் இவர்கள் விரும்புவதில்லை.

காரணம் தாய்மார்களின் மார்பழகு அழிந்து விடுமாம் இப்படி தயாரிப்பு மாவுகளை நம்பி குழந்தைகளை வளர்த்தால் குழந்தைகள் தனது பருவக் காலத்தில் இயற்கையின் எதிர்ப்பு சக்தியை இழந்து விடும்.

உதாரணமாக மழையில் நனைய முடியாது. சிறுவயதில் கண்பார்வை தெரியாது கண்ணுக்கு கண்ணாடி போடவேண்டிவரும், மூளை வளர்ச்சியிராது.

தாய்மார்களுக்கு தாய்ப்பால் அதிகம் சுரந்து வந்தால் மார்பழகு குறைந்து விடாது தாய்ப்பால் அதிகம் சுரக்க கிராமங்களில் வசிக்கும் தாய்மார்கள் அன்றாடம் சோறு வடிக்கும் கஞ்சியில் சிறிதளவு உப்பு சேர்த்து நாளும் குடித்து வந்தால் குழந்தைக்குத் தேவையான அளவு பால் கிடைக்கும். மார்பழகும் குறைந்து விடாது.

நகரங்களில் வசிக்கும் தாய்மார்கள் மூன்று வேளை உணவு அருந்துவதை நீக்கி வயிற்றுப்பசி இருக்கும் போதெல்லாம் தனக்குப் பிடித்த உணவினைச் சேர்த்துவந்தால் தாய்ப் பால் சுரக்கும் மீன், இறைச்சி பால் பழம், ஆகியன அதிகம் சேர்த்து வந்தால் தாய்ப்பால் தேவையான அளவு கிடைக்கும். தாய்மார்களின் மார்பழகும் குன்றிவிடாது.

## மிகச் சிறந்த போஷக்கு குழந்தைகளுக்கு

☆ குழந்தை பிறந்த 30 நிமிடங்களுக்கு அல்லது எவ்வளவுவிரைவாக தாய்ப்பாலூட்ட ஆரம்பிக்கமுடியுமோ அவ்வளவு விரைவாக தாய்ப்பால் கொடுக்க ஆரம்பிக்க வேண்டும். தாய்ப் பாலுக்கே முக்கியத்துவம் கொடுப்பதோடு மேலதிகமான உப உணவுகளை 3 மாதங்களில் தொடங்கலாம்

☆ தாய்ப்பாலை பிள்ளையின் தேவைக்கேற்ப இரவோ, பகலோ எந்நேரத்திலும் கொடுக்கலாம்

☆ பிள்ளைக்கு 4 6 மாதங்களின் பின்பும் தொடர்ந்து இரண்டு வயதுவரை நிறை உணவுடன் சேர்த்துக் கொடுக்கலாம்.

☆ தாய்ப்பால் குழந்தைக்கு போதுமானது அல்ல என்று சந்தேகிக்கப்படும் தாய்மார் அடிக்கடி தாய்ப்பால் கொடுக்கும்போது பால் சுரப்பது அதிகரிக்கும்.

☆ புட்டிகளோ, செயற்கை சூப்பிகளோ, தாய்ப்பால் ஊட்டும் குழந்தைளுக்கு கொடுக்கக் கூடாது.

# தேன் தரும் சுகவாழ்வு

தேன் உணவாக மட்டுமின்றி பிணிதீர்க்கும் மருந்தாகவும் பயன்பட்டு வருகிறது. கிரேக்கர்களும், எகிப்தியர்களும் பலவித நோய்களைத் தீர்க்கும் அருமருந்தாக இதனைக் கருதினார்கள்.

தேன் - கொம்புத்தேன், மலைத் தேன், புரைத்தேன், 'கட்டுத்தேன், கருந்தேன், குறுஞ்சித்தேன் என பல வகைப்படுகின்றன.

தேனில் நீர் 17 சதவீதம், குளுக்கோஸ் 31 சதவீதம், பரக்டோஸ் 38 சதவீதம்; மால்டோஸ் போன்ற சர்க்கரைகள் 10 சதவீதம், அல்புமினாய்டுகள் 2 சதவீதம், கனிமங்கள் 1 சதவீதம் விட்டமின்கள் 1 சதவீதம் போன்ற சத்துக்கள் அடங்கி உள்ளன.

தேன் பாலைவிட ஆறுமடங்கு அதிக சத்துள்ளதாகும். ஒரு கிலோ தேனில் இருந்து 3200 கலோரி ஆற்றல் கிடைக்கிறது. சுவாசம் சம்மந்தமான நோய்கள், பித்தம், வாதம், இரத்த நோய்கள், வயிற்றுக்கிருமிகள், கண் நோய்கள், மூலம்நோய் சோகை நோய், வயிற்றுக்கோளாறு மூட்டுப்பிடிப்பு, தொழுநோய், ஆகியவற்றைக் குணமாக்கும் சக்தி தேனுக்கு உண்டு

☆ தினசரி தேன்சாப்பிட்டு வந்தால் நரம்புத் தளர்ச்சி மறையும். குரல் வளமாகும். ஆயுள் அதிகரிக்கும்.

☆ நித்திரைக்குச் செல்லும் போது சூடான பாலில் சிறிதளவு தேனைக் கலந்து குடித்தால் ஞாபக சக்தி அதிகமாகும். இருதயம் பலம் அடையும்.

☆ தேனில் பலாப்பழச்சுளையை நனைத்து சாப்பிட்டால் கக்குவான் இருமல் நீங்கும். உடலுக்கும் நல்லது.

☆ காதுக்குள் ஈ, எறும்பு, புகுந்து விட்டால்தேனையும் நல்லெண்ணையையும் கலந்து சிறிதளவு காதுக் குள் விட ஈ, எறும்பு வெளியே வந்துவிடும்

☆ தேனையும் நெல்லிக்காய்ச் சாற்றையும் கலந்து குழந்தைகளுக்குக் கொடுத்தால் கணைநோய் வரமாட்டாது.

(9ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதிச்சந்தையில்

5ம் பக்கத் தொடர்ச்சி

1 விற்பனை பேரேட்டுக் கணக்குகளை நிர்வகித்தல், பராமரித்தல்

2 கடன் கட்டுப்பாட்டுச்சேவை;

3 கடன்களை திரட்டுதல்

மேற்கொள்ளும் பொறுப்பு முதல்வர் நிறுவனத்தின் கைகளிலேயே தங்கியுள்ளது. மேற்கூறப்பட்ட மூன்று பணிகளையும் முதல்வர் நிறுவனம் பயனுறுதி வாய்ந்த முறையில் கையாளுமானால் BID முறையில் பயன்பெறலாம். ஆனால் தரகுக்கம்பனிச் சேவை மேற்கூறப்பட்ட சேவைகளை ஆற்றுவதால் முதல்வர் கம்பனிக்கு இந்தப் பிரச்சினை எழாது.

### சர்வதேச தரகுச்சேவை

இரண்டு நாடுகளுக்கிடையிலான வர்த்தக நடவடிக்கைகளில் தரகுச்சேவை தொடர்புறுவதே சர்வதேச தரகுச்சேவை எனப்படுகிறது. இதனால்

1 Letters of Credit பயன்படுத்தப்படத் தேவையில்லை

2 திறந்த கணக்கு வர்த்தகம் ஊக்குவிக்கப்படுகிறது.

இந்த நடைமுறையானது உள்நாட்டுத் தரகுச்சேவையிற் காணப்படுவதில்லை. இதனால் சர்வதேச தரகுச்சேவை சிறிதளவு சிக்கலுள்ளதாகத் தோன்றுகிறது. சர்வதேச தரகுச்சேவையிற் பங்கேற்கும் தரப்பினர்.

1 ஏற்றுமதியாளர்

2 இறக்குமதியாளர்

3 ஏற்றுமதியாளரின் தரகுக்கம்பனி (அவரின் நாட்டில்)

4 இறக்குமதியாளரின் தரகுக்கம்பனி (அவரின் நாட்டில்)

### ஏற்றுமதியாளர் ஒருவர்

1 இன்னொரு நாட்டிலுள்ள வர்த்தகருக்கு விற்கவிரும்புகிறார்.

2 தனது ஏற்றுமதித் தரகுக்கம்பனியிடம் கடன் எல்லையானது அனுமதிக்கும்படி கோருகிறார்.

3 ஏற்றுமதித் தரகுக்கம்பனி இறக்குமதி தரகுக்கம்பனி (வெளிநாட்டுக்குத்) தகவல் கொடுக்கின்றது

4 குறிக்கப்பட்ட ஏற்றுமதியாளருக்கு அங்கீகாரம் கோருகிறது.

5 ஏற்றுமதியாளர் பண்டங்களை ஏற்றுமதி செய்கிறார்.

6 விற்பனைப்பட்டியலை (ஏற்றுமதி) தமது தரகுக்கம்பனிக்கு ஊடாக இறக்குமதி தரகுக்கம்பனிக்கு ஒப்படைக்கிறார்.

7 ஏற்றுமதியின் பெறுமதியில் 80% ஐ ஏற்றுமதி ஊடாக இறக்குமதித் தரகுக்கம்பனி ஏற்றுமதியாளருக்கு வழங்குகிறது.

8 இறக்குமதித்தரகுக்கம்பனி (வெளிநாடு) இறக்குமதியாளரிடம் இருந்து கடனைத் திரட்டுகின்றது.

9 ஏற்றுமதித் தரகுக்கம்பனிக்கு பணத்தை அனுப்புகின்றது.

10 ஏற்றுமதித் தரகுக்கம்பனி தமது கட்டணங்களையும் இறக்குமதித் தரகுக்கம்பனியின் கட்டணங்களையும் 20% இருந்து கழித்து மிகுதியை கொடுப்பனவு செய்கிறது.

### ஏற்றுமதியாளர் பெறும் நன்மைகள்

1 கடன் விற்பனை (ஏற்றுமதி) செய்வதால் நல்ல விலை கிடைக்கின்றது.

2 மிகச் சிறந்த விலைகள் கிடைப்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

3 கடனுக்கு உத்தரவாதம் கிடைக்கின்றது.

4 புதிய சந்தை வாய்ப்புக்களை (ஏற்றுமதி பண்டத்திற்கான) நல்ல விலைகளில் பெறுவது சாத்தியமாகின்றது. (ஆபத்துக்களை எதிர்நோக்காமல் அல்லது குறைந்தளவு ஆபத்துக்களுடன்).

5 பணம் முடங்குதல் நீக்கப்படுகின்றது.

தரகுக்கம்பனி வணிகத்துறை வளர்ச்சி அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மட்டுமே சிறப்பாக நடைபெறுகிறது என கருதக்கூடாது; துருக்கி, தாய்லாந்து, மெக்சிக்கோ, இந்தோனேசியா, இந்தியா போன்ற அபிவிருத்தியடையும் நாடுகளில் கணிசமான அளவில் தரகுக்கம்பனி இயங்குகின்றன.

நிறுவனங்களைப் பொறுத்த மட்டில் தரகுச்சேவை மிகச் சிறந்த சேவையை வழங்கிக்கொண்டிருக்கின்றது உயர்முகாமையானது மேற்குறிப்பிட்ட விடயங்களை தரகுக்கம்பனியிடம் பாரப்படுத்துவதனால் நீண்டகாலத் திட்டமிடலால் நேரத்தையும் வளங்களையும் ஈடுபடுத்த முடிகின்றது. உலகம் பூராகவும் முனைப்புள்ள கொள்கை வகுப்பாளர்கள் தரகுக்கம்பனிகளின் சேவையின் உள்ளார்ந்த பெறுமதியை உணரத் தலைப்பட்டுள்ளார்கள். தரகுக்கம்பனிகளால் கிடைக்கும் நன்மைகள் இலாபங்கள் அவற்றுக்கான கட்டணங்களைவிட உயர்வாக உள்ளன. இலங்கையும் இதற்கு விதிவிலக்காக அமையமுடியாது.

நன்றி - வணிகவியலாளன்

## ஒருங்கிணைந்த...

3ம் பக்கத் தொடர்ச்சி

### உயிரியற்காரணிகள்

பயிர்களின்தன்மை (ஓராண்டு, பல்லாண்டுப்பயிர்கள்) விலங்குகளின் தன்மை, அவைகளின் வளர்ச்சிப்பருவங்கள், அவைகளில் ஏற்படும் பீடைகளின் தாக்கம் போன்றவற்றை அறிந்திருத்தல் வேண்டும்.

### பொருளாதாரக் காரணிகள்

உள்ளீடுகளின் விலை, உற்பத்திப் பொருட்களின் பெறுமதி சந்தைவிலை போன்றவத்றை கருத்திற் கொள்ளல் வேண்டும்.

### சமூக கலாச்சார வழக்கம்

உ+ம் (அ) முஸ்லீம் விவசாயப்பண்ணையில் பன்றிவளர்ப்பை ஊக்குவிக்க முடியாது.

(ஆ) சமூகத்தால் ஏற்றுக்கொள்ளும் தன்மை.

### மூலவளங்கள்

☆ காணி ☆ தொழிலாளர்
☆ பணம் ☆ முகாமைத்துவம்.

குறிப்பிட்ட பண்ணையில் இருக்கும் மூலவளங்களுக்கேற்ப உற்பத்தி கிடைக்கின்றது. முகாமைத்துவத்திற்கு விவசாயியின் தொழில்நுட்ப அறிவு மிகவும் முக்கியமானதாகும். பண்ணையில் மேற்கொள்ளுகின்ற பயிர்ச்செய்கைக்கும், விலங்கு வேளாண்மைக்கும், ஏற்ற சகல தொழில்நுட்பங்களையும் விவசாயிதெரிந்திருத்தல் வேண்டும்.

### உள்ளீடுகள்

பயிர்ச்செய்கை

☆ விதைகள், நடுகைப்பொருட்கள்
☆ பசளைகள் ☆ எரிபொருட்கள்
☆ பீடை நாசினிகள்.

விலங்கு வேளாண்மை

☆ கால்நடைகள், தீவனங்கள் எரிபொருட்கள், நோய்த்தடுப்பு மாற்று மருந்துகள்.

சிபார்சு செய்யப்பட்ட உள்ளீடுகளைப் பாவிப்பதன் மூலம் கூடிய உற்பத்திப்பொருட்களைப் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்ளுங்கள்

☆ கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழு சட்டப்பிரமாணங்களின் படி கூட்டுறவுப் பணியாளர்களின் நடத்தையில் அவர்களால் செய்யப் படக்கூடியபாரியகுற்றங்கள்யாவை?

கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழு சட்டப்பிரமாணத்தின் பின் இணைப்பு iv இன் படி பின்வருவன பாரிய குற்றங்களாகக் குறித்துரைக் கப்பட்டுள்ளன.

1. பணிகொள்வோருக்குச் சொந்தமான அல்லது பொறுப்பிலுள்ள பண்டங்களை அல்லது பொருட்களை வேலையாளரின் நேரடியாக புறக்கணிப்பு, வேண்டுமென்றே செய்யும்தன்மை, அல்லது மோசடி என்பன பொருந்தத்தக்கவகையில் சேதம் விளைவித்தல், அல்லது செய்தல்.

2. வேண்டுமென்றே கீழ்ப்படிவில்லாதிருத்தல் அல்லது வேண்டுமென்றே ஒழுக்காற்றைமீறல்.

3. கூட்டுறவுவளவிலுள்ள பொருட்களைத் திருடல், அல்லது பணிகொள்வோனது வியாபாரத்திற்குத் தொடர்புடைய பொருட்கள் தொடர்பான நேர்மையீனம் அல்லது மோசடி.

4. ஒழுக்கக்கேடு தொடர்பான ஒரு குற்றவாளியாகக் காணப்படல்

5. இலஞ்சம், அல்லது சட்டவிரோதமான கையூட்டுகளை ஏற்றலும், கொடுத்தலும்

6 தாபனத்தில் வேலை நேரத்தில் கலக, அல்லது ஒழுங்கற்ற முறையில் நடத்தல்

7. கடமையின் போது தூங்குதல் (காவலாளிகள் அல்லதுசேவைஆளணியினர் விடயத்தில் கடமை நேரத்தில் தூங்குதல் அல்லது கடமை நேரத்தில் தலத்தில் இல்லாதொழிகல்)

8 வேலை நேரத்தில் மதுமயக்கத்தில் இருத்தல்

9. பணிகொள்வோரின் வளவிலுள்ள பாதுகாப்புச் சாதனங்களுடன் தேவையற்றுத் தலையிடுதல்.

10 அத்தகைய சங்கத்தின் கொடுக்கல் வாங்கல்நடவடிக்கைகள்சம்பந்தப்பட்ட உண்மையான தகவல்களைக் கொடுக்கத் தவறுதல்

11. பொய்க் கணக்குகள்

12. மோசடிகளை மறைத்தல்

13. குற்றவியல் நம்பிக்கைத் துரோகம்

14. விலைக்கட்டுப்பாட்டு அல்லது சங்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தத்தக்கு நடத்தை, உணவுக் கட்டுப்பாட்டு சட்டங்களின் கீழ் அல்லது பங்கீட்டுப் பொருட்களின் திட்டங்களுக்குக் கீழ் அமைந்த விதிகள் அல்லது ஒழுங்கு விதிகள், அல்லது கட்டளைகளை மீறல் அல்லது அத்தகைய நடத்தைக்கு உதவியாகவோ உடந்தையாகவோ இருத்தல்

## தேன் தரும்...

7ம் பக்கத் தொடர்ச்சி

☆ தேன், கத்தரி இலைச்சாறு இரண்டையும் சம அளவு கலந்து தினமும் இருமுறை குடித்து வர நுரையீரல் தொல்லைகள் நீங்கும்.

☆ ஒரு அவுன்ஸ் தேனில் ஒரு அவுன்ஸ் கரட்சாறு கலந்து சாப்பிட்டால் ''அனிமியா'' எனப் படும் இரத்த சோகை குணமாகும்.

☆ காலையில் தேனுடன் இஞ்சிச் சாறு கலந்து குடித்தால் பித்தம் அகலும், ஊளைச்சதை குறையும்.

☆ தேனையும், வெங்காயச்சாறையும் சம அளவு கலந்து கண்வலி வரும் போது ஒரு சொட்டுவிட கண் வலி நீங்கும். கண் தளர்ச்சி குறையும்.

☆ சாப்பிடுவதற்கு ஒருமணிநேரத்திற்கு முன்பு இரண்டு கரண்டி தேன் சாப்பிட்டால் நெஞ்சு எரிச்சல். வயிற்றுக்காந்தல், அல்சர் ஆகியன குறையும்.

☆ வல்லாரையை தூள் செய்து ஒரு கரண்டி தூளோடு, இரண்டு கரண்டி தேனை ஊற்றி குழைத்து உணவு உண்டு முப்பது நிமிடங்களுக்குப்பின் உட்கொள்ளமெலிந்த உடல் பருமனாகும் இது உண்ணும் போது தயிர், இளநீர், மற்றும் குளிர்ந்த பானங்களைத் தவிர்த்தல் வேண்டும்.

☆ மாதுளம்பழச்சாறோடு தேன் கலந்து காலை உணவிற்குப் பின் சாப்பிட்டுவர மலச்சிக்கல் நீங்கும் புதிய இரத்தம் உற்பத்தி ஆகும்.

☆ நெல்லிக்காய்ச்சாறு இரண்டு கரண்டி எலுமிச்சைசாறு இரண்டு கரண்டி தேன் ஒருகரண்டி இம் மூன்றையும் கலந்து வெறும்வயிற்றில் சாப்பிட்டுவந்தால் நீரிழிவு நோய்க்கு நல்லதாகும். அது மட்டுமின்றி இன்சுலின் ஊசி போடுவதற்கும் சமமான பலன் கிடைக்கும்.

☆ வேப்பிலைச்சாற்றில் சிறிது தேன் கலந்து 30 நாட்கள் சாப்பிட்டுவர தோல் சம்மந்தமான நோய்கள் குறையும்.

## கணணித் தொழில் நுட்பம்

4ம் பக்கத் தொடர்ச்சி

கணணித்துறையின் அடுத்த அபிவிருத்திப்படி 1946 இல் உருவாக்கப்பட்ட கணணிமூலம் ஏற்பட்டது. இதற்கு ராடர் அமைப்பு முறையில் இணைக்கப்பட்ட துரித வேகமுள்ள மின்சமிக்கைகளால் எண்களும் அறிவுறுத்தல்களும் பிரதிபலித்துக் காட்டக்கூடியதான தன்னியக்க கணக்கு இயந்திரம் பென்சில்வேனியா சர்வகலாசாலையின் மூர்மின்சார எந்திரவியல் பாடசாலையைச்சேர்ந்த எக்கெர்ட், மார்லி ஆகியோரால் உருவாக்கப்பட்டது. இந்த மின்னணு எண்கணணிக்கு இடப்பட்ட பெயர் ''எனியக்'' என்பதாகும். இது இதற்கு முன்னைய ''ஹார்வர்ட்'' கணணியைவிட 1500 மடங்குக்கு அதிகமான வேகமுடையது. இதன் நிறை 30 தொன்னிலும் அதிகமாக இருந்தது.

மூர் மின்சார எந்திரவியல் பாடசாலையை சேர்ந்த ''வொன் நியூமன்'' தலைமையிலான குழு ஒன்று உள்ளக சேமிப்புக்களுக்கும் எண்கணிதத்துக்கும் 0 தொடக்கம் 9 வரையான இலக்கங்களை பயன்படுத்துவதற்குப் பதிலாக ''0'' ''1'' ஆகியவற்றைப் பயன்படுத்தி புதிய கணணி ஒன்றை உருவாக்கினர். இதற்கு ''எட்வாக்'' எனப் பெயரிட்டனர். இது 1951 இல் செயற்படத் தொடங்கியது

இக்காலகட்டத்தில் அமைக்கப்பட்ட ஏனைய கணக்கு இயந்திரங்களாக பிரிட்டன் தேசிய பௌதிக ஆய்வுகூடம் உருவாக்கிய ''அசெட்'' உம் மன்செஸ்டர் சர்வகலாசாலையைச் சேர்ந்த வில்லியம்ஸ், கில்பனும் உருவாக்கிய மார்க் - '' (மடோய்) உம் அமெரிக்க மஸசுசெட்ஸ் தொழில்நுட்பவியல் கழகம் அமைத்த வேர்ல்விண்ட் - 1 '' உம் குறிப்பிடக் தக்கவையாகும்.

வர்த்தகரீதியில் கிடைத்தமுதலாவது ஆங்கில எண் கணணி 1951 இல் ஆண்டிஃபெறண்டி லிமிட்டெட் என்னும் நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டது இது மார்க் 1 ஐ அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இதன் பின்னர் மின்னணுக் கைத்தொழிலில் போட்டி போட்டு ஆராய்ச்சிகள் மேற்கொண்டதன் விளைவாக கணணித்துறையும் பல முன்னேற்றங்களைக் கண்டு வருகின்றது.

# ஓநாயும் சிறுவனும்

ஒரு காட்டில் ஏழைச்சிறுவன் ஒருவன் தனது பெற்றோருடன் வாழ்ந்து வந்தான் அவனுக்கு நன்றாக நடனமாடத் தெரிந்திருந்ததுடன் நுண்ணறிவும் பெற்றிருந்தான்.

வீட்டுக்குத் தேவையான விறகுகளை வெட்டிக் கொடுப்பதும் மந்தைகளை மேய்ப்பதுமே அவனுக்கு அன்றாட வேலையாக இருந்தது.

அவன் காட்டுக்கு விறகு வெட்டச் செல்லும் போது எப்போதும் தனியாகச் செல்வது வழக்கம்.

ஒருநாள் விறகு வெட்டச் சென்றபோது மந்தைகளையும் வேட்டை நாய்களையும் கூட்டிச் சென்றான். நீண்டதூரம் சென்றதினால் ஏற்பட்ட களைப்பில் மந்தைகளை மேயவிட்டு சிறிது நேரம் இளைப்பாறினான்.

களைப்பு நீங்கியதும், மந்தைகளை மேயவிட்டு மேலும் சிறிது தூரம் காட்டுக்குள் சென்று விறகு வெட்ட ஆரம்பித்தான். அப்பொழுது மிகுந்த பசியுடனும்,வாடிய முகத்துடனும் அவ்வழியே வந்த ஒநாய் ஒன்று சிறுவனைக் கண்டதும், மகிழ்ச்சி பொங்க,

ஏய் சிறுவா ! உன் வாழ்நாளின் இறுதிக்கட்டத்தில் இப்பொழுது இருக்கிறாய். இன்னும் சொற்ப வேளையில் எனக்கு நீ உணவாகப் போகிறாய் உன் இஷ்ட தெய்வத்தை வணங்கி உனது இறுதி ஆசை ஏதாவது இருந்தால் அதைக்கூறு அதனை நான் நிறைவேற்றுகிறேன் என்றது.

கூரிய மதிநுட்பமும், நுண் அறிவும் உள்ள சிறுவனாச்சே, நழுவ விடுவனா இந்தச் சந்தர்ப்பத்தை

உடனே சிறுவன் ஒநாயைப் பார்த்து '' என் அன்புக்கினிய நண்பனே. நான் எனது பெற்றோரிலும் பார்க்க நேசிப்பது எனது நடனத்தையும், எனது மந்தைகளையுமே. மந்தைகள் பக்கத்தில் தான் மேய்ந்து கொண்டிருக்கின்றன. எனக்கு நீ உதவுவாயானால் உன் முன் எனது இறுதி நடனத்தை ஆடி முடிக்கவிரும்புகிறேன் என்றான்.

அதற்கு ஒநாய் ஏய் சிறுவா ; உன்னுடன் விளையாடிக்கொண்டிருக்கும் நிலையில் நான் இல்லை, உனக்கு நான் எப்படி உதவவேண்டுமென்று கூறு என்றது.

உடனே சிறுவன் சந்தோஷத்துடன், எனது இனிய நண்பரே ! உங்கள் குரல் வளம் மிகவும் இனிமையானது என்று பலர் கூறக்கேட்டிருக்கிறேன். எனவே தாங்கள் பாட நான் ஆட விரும்புகிறேன் என்றான்.

உடனே ஒநாய் யோசித்துவிட்டு ஏய் சிறுவா, எனது குரல் மிகவும் பயங்கரமானது என்று கூறி ஒடுகிறார்கள். நீ மட்டும் எனது குரல் இனிமையானது என்று கூறுகிறாயே என்று கூறியது.

அதற்கு சிறுவன் உங்கள் எதிரிகள் தான் அப்படிக் கூறுவார்கள். உங்கள் குரல் எவ்வளவு இனிமையானது என்று என் போன்றவர்களுக்குத்தான் தெரியும். நீங்கள் உரத்த குரலில் பாடுங்கள். நான் ஆடுகிறேன். என்னைத் தேடி எனது பாதுகாவலர்கள் வந்துவிடப் போகிறார்கள் என்றான் சிறுவன்.

ஒநாய் சந்தோஷமிகுதியால், தனது பசியையும் மறந்து உரத்த குரலில் கத்தியது. சிறுவனோ ஆடி, ஆடி, நண்பா இன்னும் உரத்துப்பாடு என்றான், ஒநாய் மேலும் கண்ணை மூடிக் கொண்டு உரத்துப் பாட மந்தைகளுக்குக் காவலாக நின்ற வேட்டை நாய்கள் ஒநாயின் சத்தத்தைக் கேட்டு உறுமிக் கொண்டு பாய்ந்து ஓடி வர ஒநாய் மிகுந்த பயத்துடன் ஓடியது. நாய்கள் துரத்திச் சென்று ஒநாயைக் கடித்து குதறின.

## அறிவாளியை அறியும் வழி

வேட்டைக்குச்சென்றவர்கள் ஒருமானைத் துரத்திக் கொண்டு காட்டு வழியே தேடிச் சென்றனர். அவ்வழியில் ஒருசாது இருப்பதைக் கண்டு முதலாவதாகப்போனவர், ''ஏகிழவா, இந்த வழியால் ஒரு மான் ஓடியதைக் கண்டாயா ? என்று கேட்டார்.

இரண்டாவதாக வந்தவர், பெரியவரே, இவ்வழியால் ஒருமான் சென்றதைக்கண்டீரா? என்று கேட்டார்.

மூன்றாவதாக வந்தவர் அந்தச் சாதுவை உற்று அவதானித்து விட்டு அவர் ஓர் குருடன் என அறிந்து கொண்டார்.

## மணிமொழிக் கதை

'' குரு மகாரிஷியே: இந்த வழியால் ஏதாவது மிருகம் சென்ற கால் ஓசை கேட்டதா ? தயவு செய்து சொல்ல முடியுமா ? என்று வினாவினார்.

அப்போது அந்தப் பெரியவர், முன்பு ஒரு சேவகனும், மந்திரியும், என்னிடம் மான் ஒன்று போனதா ? எனக் கேட்டார்கள் அரசே என்று சொன்னதும், உண்மையான அரசனானவர் ஆச்சரியப்பட்டு எப்படித் தாங்கள் எங்களை அறிய முடிந்தது என்று கேட்க, என்னிடம் நீங்கள் வினவிய சொல்மூலம் அறிந்து கொண்டேன் என்றார். எப்படி அறிவின் மகத்துவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாவட்ட கூட்டுறவுநிறுவனங்களுக்கு..,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும் கேட்டுள்ளனர். இங்கு நாம் வருகைதந்து உங்கள் குறைகளை நேரில் அறிய முடிந்தமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். எல்லா உதவிகளையும் எம்மால் செய்ய முடியாவிட்டாலும் செய்யக்கூடியவற்றை நாம்செய்து தருவோம் என்று உறுதிப்படக்கூறினார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு செ. கு சண்முகநாதன் பேசுகையில் கூறியதாவது

யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால் கூட்டுறவு நிறுவனங்களுக்கு சுமார் 55 கோடி ரூபாவுக்கு மேலான பெறுமதியான சொத்துக்களுக்கு சேதமேற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அழிக்கப்பட்ட இச் சொத்துக்கள் பணமாகவும், பொருட்களாகவும் கட்டிடங்களாகவும் இருப்பதாகப் புள்ளிவிபரங்களில் இருந்து தெரியவருகிறது.

இந்த அழிவுகளை ஈடுசெய்வதற்கு. பல்வேறு ஸ்தாபனங்களிடம் உதவிகள் கேட்டபோது ஒன்றரைக்கோடி ரூபா மட்டுமே இன்றுவரை கூட்டுறவுத்துறைக்கு கிடைத்துள்ளது. இத்தகைய பாரிய அழிவு சூழ்நிலையிலும் கூட்டுறவுத்துறை யாழ் மாவட்டத்தில் ஓரளவுக்காகுதல் தலை நிமிர்ந்து நிற்கிறதென்றால் அது இப்பகுதியின் கூட்டுறவாளர்களின் அயராத உழைப்பேயாகும்.

தேசிய கூட்டுறவுச்சபைக்கு பல உலகநாடுகள் பல உதவிகளை வழங்கி வருகிறபோதும் கடந்த பல வருடங்களாக யாழ்ப்பாணத்துக்கு எந்தவிதமான உதவிகளோ, தொடர்புகளோ இருந்தது இல்லை எனவே வருங்காலத்தில் தேசியகூட்டுறவுச் சபை யாழ்ப்பாண கூட்டுறவாளர்களின் நலன்களிலும் சிரத்தை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை உதவிச்செயலாளர் (மகளிர் விவகாரம்) செல்வி ஜே நவரட்னே பேசுகையில் கூறியதாவது.

உலகளாவிய ரீதியில் பெண்களின் சனத்தொகை 50 வீதமாகக் காணப்படுகிறது சமுதாயத்திலும் பெண்களின் நிலை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது குடும்ப பொருளாதரத்தில்குடும்ப நிலை, நிதி மற்றும் தேவைகளையும், வசதிகளையும் புரிந்து செயற்படுபவர்கள் பெண்களே, பெண்கள் படும் கஷ்டங்களை பெண்களேதான் உணருவார்கள்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில் தமிழ் பெண்கள் அதிகளவு உழைப்பில் தங்கள் நேரத்தை செலவிட்டு வருபவர்கள் என்பது எனக்கு நன்கு தெரியும். தேசிய ரீதியில் உள்ள மகளிர் குழுவில் யாழ். மாவட்ட மகளிர் குழுவினர் அங்கம் வகிக்க முடியவில்லை. அதற்கு நாட்டின் சூழ்நிலை ஒரு காரணமாக இருந்து வருகிறது. எப்படி இருப்பினும் யாழ். மாவட்ட மகளிர்களின் தேவைகளையும் அவர்களின் செயற்பாடுகளையும் இன்று மகளிர்குழுத் தலைவி திருமதி ரதிசோதிலிங்கத்தின் உரையின் மூலம் அறிந்துள்ளோம். எனவே உங்கள் தேவைகளில் எவற்றை எம்மால் பூர்த்தி செய்ய முடியுமோ அவற்றை இனம்கண்டு பூர்த்திசெய்வோம்

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்(எண்பார்வை) திருமதி கோ. திருநாவுக்கரசு பேசும் போது கூறியதாவது.

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மகளிர்களின் பெயற்பாடுகளுக்கு நிதி முக்கிய தேவையாக இருப்பதால் அந் நிதியினை கிடைக்கக்கூடிய வாய்ப்புகளை தேசிய கூட்டுறவு சபை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் மகளிர் செயற்பாட்டுக்கு நிதி பற்றாக்குறையாக இருந்து வருகின்றபோதும் யாழ் மாவட்ட மகளிர் குழுவினரின் செயற்பாடுகள் திருப்திகரமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். தற்பொழுது மகளிர்களுக்கு அளிக்கப்பட்டுவரும் பயிற்சிகள் அவர்களது சுயதொழில் வாய்ப்பை அதிகரிக்கும் வகையில் அமைந்துள்ளமையால் அப்பயிற்சிகள் வெற்றியளித்துள்ளது என்று கூறினார்.

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையின் மகளிர் விவகார உத்தியோகத்தர் திருமதி வே செல்வரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை மாவட்ட செயலாளர் திரு. சு. சிவசுப்பிரமணியம் நன்றியுரையின் போது, யாழ் மாவட்டமகளிர் குழு மகளிர்களுக்கு அளித்து வரும் பல்வேறு பயிற்சிகளுக்கும் கல்வித் திணைக்களத்தின் முறைசாரகல்விப் பிரிவின் அனுசரணையுடன் பாடவிதானம் தயாரித்து அதன் அடிப்படையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதுடன் இறுதியில் பரீட்சையில் சித்தி அடைபவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. பயிற்சிகளில் திறமையாக செயல்படுவர்களுக்கு வேலை வாய்ப்பும் வழங்கி வருகிறோம் என்று கூறி வைபவத்தில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி கூறினார்.

மனையியல்டிப்புளோமா பயிற்சி நெறியில் சித்தியடைந்தோர்க்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இவ்வைபவத்தில் யாழ் கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. பெ. கனகசபாபதி, பணிப்பாளர்சபை உறுப்பினர்கள், கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், மற்றும் மகளிர்குழுக்களின் அங்கத்தவர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

## பட்டொளி வீசிப் பறக்கட்டும் கூட்டுறவுக் கொடி!

ஒருவர்க்காய்ப் பலரும்
பலருக்காய் ஒருவரும்
பணிசெய்யும் உன்னதமாம்
தத்துவத்தை அடிப்படையாய்க்
கொண்ட கூட்டுறவு
இயக்கமது இம் மண்ணில்
ஓங்கி மிகவளர்ந்தே
விரைவாக - வலுவாக
மக்களுக்குத் தரும் பயனைக்
காட்டுதல் போல் -
உயர்ந்தே பறந்திடட்டும்
கூட்டுறவுக் கொடியிங்கே!

நலிவுற்ற நம்மவர்க்கு
நலமெல்லாந் தந்திடவே
பலப் பல வழிகளிலும்
பயன்கள் அளித்தவர்கள்
சமூகத்தில் பொருளியலில்
செழிப்புடனே விளங்கிடவே
செய்திடலாம் சேருங்கள்
என்றே சொல்லுதல் போல்
உயர்ந்தே பறந்திடட்டும்
கூட்டுறவுக் கொடியிங்கே!

கூட்டுறவால் விளைகின்ற
நாட்டு உயர்வுதனை
பட்டி தொட்டியெங்கும்
விளக்கி அதை வளர்க்கின்ற
கூட்டுறவாளர் தினம் - அதனை
உணர்வுமிகக் கொண்டு
கொண்டாடும் சிறப்பினிலே
உயர்ந்தே பறந்திடட்டும்
கூட்டுறவுக் கொடியிங்கே!

நாயன்மார்கட்டு
ப. மகேந்திரதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News paper at the G. PO
SriLanka Under No K. V. J. 59 / 87



# கூட்டுறவு ஊழியர்களுக்கு, சனிக்கிழமைகளில் அரை நாள் லீவாகக் கணிக்கப்படும்

### கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு செயலாளர் கடிதம்

கூட்டுறவு நிறுவனங்களில் பணி புரியும் பணியாளர்கள் சனிக்கிழமைகளில் லீவு எடுக்கும் போது அது அரை நாள் லீவாகக் கணிக்கப்பட வேண்டும் என்று வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு செயலாளர் யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் திரு. சி. வி. கே. சிவஞானத்துக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சனிக்கிழமை லீவு தொடர்பாக யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருக்கு முன்னர் (7 - 5 - 99ல்) அனுப்பிவைக்கப் பட்ட கடிதத்தில் கூட்டுறவுப் பணியாளர்கள் சனிக்கிழமைகளில் லீவு எடுத்தால் அந்த லீவு முழுநாளாகக் கணிக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

சனிக்கிழமைகளில் அரை நாள் லீவாகக் கணிக்கப்படவேண்டுமென்ற கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் கடிதப் பிரதிகள் யாழ். உதவித் தொழில் ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், சங்கானை கூட்டுறவு ஊழியர்தொழிற் சங்கத் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி லீவுதொடர்பாக யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை, மற்றும் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கங்கள் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு வடக்குகிழக்கிற்குமகஜர்கள் அனுப்பி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வீரசிங்கம் மண்டபத்தை பார்வையிட்டனர்

புனரமைப்பு செய்யப்பட்டு வரும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தை இலங்கை தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் லயனல் சமரசிங்க, மற்றும் தேசிய கூட்டுறவுச் சபை பணிப்பாளர் கள் நேரில்சென்று பார்வையிட்டனர்.

மேற்படி கூட்டுறவுக் குழுவினர் யாழ். கடற்கரை வீதியில் உள்ள பிராந்திய கூட்டுறவுக் கல்லூரி, யாழ். கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி, புனரமைப்புச் செய்யப்பட்டுவரும் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கட்டிடங்களையும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இக் குழுவினருடன் யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் திரு. பெ. கனகசபாபதி. மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் சென்றிருந்தனர்

## லொறிக் கொள்வனவிற்கு:

# பத்து பல. நோ. கூ. சங்கங்களுக்கு 150 லட்சம் ரூபா கடன் உதவி.

### கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அனுமதி

யாழ்.மாவட்டத்தில் உள்ள பத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு லொறிகளைக் கொள்வனவு செய்வதற்கு தலா பதினைந்து லட்சம் ரூபா வீதம் 150 லட்சம் ரூபாவை கடனாக வழங்குவதற்கு வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

மேற்படி தகவலை யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. கு. சண்முகநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், நல்லூர், புலோலி, சுன்னாகம், தென்மராட்சி கிழக்கு தெல்லிப்பளை, சாவகச்சேரி பச்சிலைப்பள்ளி, பருத்தித்துறை, சங்கானை ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு லொறிக்கொள்வனவிற்காக கடன் அடிப்படையில் மேற்படிநிதி வழங்கப்படவுள்ளது.

இச்சங்கங்கள் லொறிக்கொள்வனவு தொடர்பான கடன் விண்ணப்பங்களை காலதாமதமின்றி திணைக்களத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுமென்றும் அவை பரிசிலனை செய்யப்பட்டதும் இதற்கான நிதி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கருத்தரங்கு

யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிராந்திய சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு ஒன்று பிராந்திய தலைவர் திரு. வி. சுகுமார் தலைமையில் சாவகச்சேரி கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில்யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை கல்வி பயிற்சியளிப்பு உத்தியோகத்தர் திரு. வீ. கே. சிவராசசுந்தரம் "சி. க. கூ. சங்கங்களும் சுயதொழில் வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கான உதவிகளும்" என்னும் தலைப்பிலும், யாழ். மாவட்ட விவசாய விரிவாக்க திணைக்கள பாடவிதான உத்தியோகத்தர் திரு. பி. ரி பொன்னுத்துரை, விவசாயப் போதனாசிரியர் திரு. ரி. தம்பிராசா ஆகியோர் "நெற்செய்கையும், பீடைகளைக் கட்டுப்படுத்தலும்" என்னும் தலைப்பிலும் கருத்துரை வழங்கினார்கள்.

யாழ்மாவட்ட கூட்டுறவுச்சபை அச்சகத்தில் அச்சிட்டு இல 14 மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ். மா. கூ. சபையினரால் 1999ம் ஆண்டு ஆவணி மாதம் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org